காற்றாலைகளை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்குச் சில நேரங்களிலே மின் வாரியத்தின்மூலமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். சில நேரங்களிலே தங்களுடைய தொழிற்சாலைக்கு அந்த மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று மின் வாரியத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே மின்சார வாரியம், அவர்கள் உற்பத்தி செய்த, காற்றாலையின்மூலம் கிடைத்த மின்சாரத்தை அவர்களுக்கு வழங்கும்போது, Distribution and Transmission Line இழப்புகளை அந்தப் பணத்திலேயிருந்து கழித்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படிக் கழிக்காத காரணத்தினாலே, ரூ.204.87 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இதை எப்படிச் சரி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். காற்றாலை மின் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றவர்கள் இந்த மாநிலத்திலேதான் இப்போதும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் அதிபர்களும் இந்த மாநிலத்திலேதான் தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அடுத்த 5 ஆண்டுகளுக்கு, ஏற்கெனவே அவர்கள் Distribution and Transmission Line Loss-ஐக் கழிக்காததை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களோடு கலந்து பேசி, அந்த இழப்பை ஈடு செய்ய முடியுமா என்பதை விவாதிப்பதற்கு, அந்தத் தொழில் அதிபர்களோடு பேசும்படி மின் வாரியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே...

(ஆ) சென்னை, தண்டையார்பேட்டையில் துணை மின் நிலையம் அமைத்தல்

திரு. பி.கே. சேகர்பாபு: தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சேகர்பாபு, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டையார்பேட்டை பகுதிக்குட்பட்ட, 7, 8 பகுதிகளைச் சார்ந்த நகர்களுக்குத் தொடர்ந்து ஏற்படுகின்ற மின் தடையைப் போக்குவதற்காக, கடந்த காலங்களிலே 110 Kilo Volt திறன் கொண்ட துணை மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கான கருத்துரு உருவாக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டு, இன்னும் இட மாற்றம்

பெறப்படாததால், அந்தப் பணி நிலுவையில் உள்ளதாக அறிகிறோம். இந்த மின் தடையினால், அரசிடமிருந்து பெற்று, மாநகராட்சியில் பயன்படுத்துகின்ற தெரு விளக்குகள்கூட சரிவர எரியாததால் பொது மக்களுக்கு உண்டாகின்ற பாதிப்பாலும், இந்த மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஏற்படுகின்ற, கொசு போன்ற தொல்லைகளிலிருந்து அந்த மக்களைக் காப்பாற்றுவதற்காகவும், தொடர்ந்து அந்தப் பகுதியிலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 1,332 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதாகவும், அந்தப் பகுதிக் குடும்பங்களுக்கும் மின்சாரத் தேவை இருப்பதாலும், உடனடியாக இந்த 110 Kilo Volt துணை மின் நிலையத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிதி அமைச்சர் 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையிலே கல்வி அமைச்சராக இருந்தபோது, வட சென்னை முழுவதும் Low voltage–ஆல் பாதிக்கப்பட்டு, அந்தப் பகுதிகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியையும் பெற்று, 100 கோடி ரூபாய் செலவிலே சென்னை உயர் நீதிமன்றத்திலே ஒரு துணை மின் நிலையமும், அதைப்போல, துறைமுகம் தொகுதியிலே ஒரு துணை மின் நிலையமும் அமைக்கப்பட்டு, வட சென்னையில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் தண்டையார்பேட்டை பகுதியில் இப்போது ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து, டிசம்பர் மாதத்திற்குள் அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மின்சார வாரியத்திற்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) திரு. சின்னசாமி, உட்காருங்கள், திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உட்காருங்கள், அனுமதி இல்லை, உட்காருங்கள்.